# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை — 2024(2025)

**க.பொ.த. (சா.தர) - 2024(2025) பரீட்சை 2025 மார்ச் மாதம் 17 ஆம் திகதி தொடங்கி 2025 மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரையும், நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.**

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எந்த தாமதமுமின்றி பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளை அவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.

தபால் மூலம் இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 2025.03.07 ஆம் திகதியிலிருந்து **www.doenets.lk** பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்குள் நுழைந்து தமது அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத அல்லது அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்ய முடியாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும்.

**அனுமதி அட்டையில் திருத்தங்கள் செய்தல்**

அதிபருக்கோ, தனிப்பட்ட விண்ணப்பதாரிக்கோ கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டையில் பாடம், மொழிமூலம், பெயர் ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின்,

- சகல திருத்தங்களும் நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்வதுடன் அதற்காக **https://onlineexams.gov.lk/eic** இணையதளத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.
- ஒரு திருத்தமொன்றை ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ள முடியும்.
- இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை மாற்றம் செய்ய முடியாது.
- திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் **2025.03.10 நள்ளிரவு 12.00** மணியுடன் நிறைவடைகிறது.

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புக்களை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பொதுப் பரீட்சைகள் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. இப்பரீட்சையில் கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது இவ்விதிகளை மீறிச்செல்வோர் 5 வருடங்களுக்குப் பரீட்சை தண்டனைக்குட்படுவர் என்பதுடன் அவ்வாறான கருவிகள் பறிமுதல் செய்யப்படும்.
5. பரீட்சார்த்திகள் Bluetooth போன்ற இலத்திரனியல் உபகரணங்கள் / கருவிகள் (Electronic Communication Devices) பயன்படுத்தாதிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நேரம் முழுவதும் தமது முகமும் இரு காதுகளும் திறந்தபடி தெளிவாகத் தெரியுமாறு இருத்தல் வேண்டும். அவ்வாறு செயற்படாத பரீட்சார்த்திகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.


| | | |
|---|---|---|
| **விசாரணைகள் :-** | **தொலைபேசி எண்** | **: 011 - 2784537, 2784208, 2786616** |
| | **உடனடி அழைப்பு** | **: 1911** |
| | **தொலைநகல் இலக்கம்** | **: 011-2784422** |
| | **மின்னஞ்சல் முகவரி** | **: gceolexamsl@gmail.com** |
| | **தபால் முகவரி** | **: பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, த.பெ.இல 1503, பெலவத்தை, பத்தரமுல்ல.** |


**6/4/OL/2025**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல**
**2025.03.28 ஆம் திகதி**

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

tamilguru.lk